தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2020 மேழம் (15-4-1989) ஓர் உருபா (இதழ் எண்: 119)

மக்களை அச்சுறுத்தியோ, துன்புறுத்தியோ இந்திய ஒருமைப் பாட்டை உருவாக்கி விட முடியாது!

பிரிந்துபோகும் உரிமை கொண்ட தேசிய இனங்களின் கூட்டாட்சியையே இப்பொழுதைக்கு உருவாக்க முடியும்!

உள்துறை அமைச்சர் பூட்டாசிங்கின் மிரட்டல் பயன்தராது!

நடுவணரசு நாணயமான, நடுநிலையான முறையில் எண்ணி முடிவெடுப்பதே மக்களுக்கு உகந்தது!

இந்தியா பல்வேறு தேசிய இன மக்களைக் கொண்ட நாடு என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் அத்தனைத் தேசிய இன மக்களுக்கும் தனித் தனியான மாநிலங்கள் அமைக்கப் பெறவில்லை. முகாமையான சில தனி மொழிகளையும், அவற்றைப் பேசும் இனங்களுக்குமே, அவற்றின் தனித்தனி-யான கலை, பண்பாடு நாகரிகங்கள் ஆகியவற்றின் பின்புலங்களைக் கொண்டு, தனித்தனி மொழி மாநிலங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இவையும் ஆட்சி எளிமையைக் கருத்தில் கொண்டே, அரசியல் முறையில் பிரிக்கப் பெற்றுள்ளனவே தவிர, அந்தந்த மொழியின மக்களின் தனித் தன்மையான நலன்களைக் கருதி அமைக்கப் பெற்றனவல்ல. இந்த நாட்டுக்கு விடுதலை வழங்கிய பொழுது, இதனை முன்னாள் ஆண்ட வெள்ளையர்கள், தெரிந்தோ தெரியாமலோ, இந்நாட்டை ஆரியப் பார்ப்பன முதலாளியர்களிடம் ஒப்படைத்துச் சென்றனர். அவர்களே தங்கள் விருப்பத்திற்கும் நோக்கத்திற்கும் சுரண்டலுக்கும் மேலாளுமைக்கும்

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

ஒரு விடுதலை விரும்பியின் மடல்கள்!

மடல் : 8 மதுரை நடுவண் சிறை

(18-10-88, 19, 25-11-87, 2-12-88 ஆம் பக்கல்கள் எழுதிய மடல்களின் பகுதிகள்.)

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய அப்பா அவர்களுக்கு வணக்கங்கள்!

...கடந்த காரிக்(15-10-88)கிழமை வழக்கறிஞர் தென்னவனும் வழக்கறிஞர் சங்கரசுப்புவும் வந்தனர். நாங்கள் உசாவல் செய்யப் பெற்றது, பிடிபட்டது, தொல்லைப் படுத்தப் பட்டது—பற்றியான அனைத்து விளக்கங்களையும் குறித்துக் கொண்டு சென்றுள்ளனர். மேலும் எவர் எவரெல்லாம் இங்ஙனம் துன்புறுத்தப் பட்டனர்—அவர்கள் முகவரிகளெல்லாம் வேண்டும் என்றும், உசாவல் செய்யப் பெற்றிருப்பினும் தேவை என்றும் கூறினர். அவற்றையெல்லாம் அவர்களிடம், ஏறத்தாழ ஒரு மணி நேரம் கூறியபொழுதும், மேலும் விளக்கமாகப் பேச இயலவில்லை. காரணம் அவர்கள் அனைத்தையும் எழுதிக் கொண்டே கேட்டதால். எனவே குணவை அவர்களிடம் அனுப்பி அவருக்குத் தெரிந்த அனைவரின் துன்புறுத்தம் பற்றியும் தெரிவிக்கச் சொல்லுங்கள். மேலும் அவர்கள் என்ன என்ன கேட்கிறாரோ அவை பற்றியெல்லாம் சொல்லுவது சரி. அது பற்றித் தென்னவனுக்கு நாங்களும் மடல் எழுதுகிறோம். (18-10-88)

...அங்கிருக்கிற பணி அழுத்தங்களும், தாங்கள் அங்குத் தனித்து நின்று தொல்லைப் படுகிற காட்சிகளையும் ஒவ்வோர் அணுவாக எண்ணி வருந்திக் கொண்டுதான் உள்ளேன். அது பற்றிச் சிறிதும் உணராமல் இல்லை. நான் கவலுறுவதே, இக்கால், அஃது ஒன்றுக்காகத்தான் அதிகமாக உள்ளது. நாம் வெளியிலிருந்து தக்க நிலையில் துணை நின்று பணியாற்ற இயலாமல் போகிறது என்பதே அக் கவலை.

முதலில் அம்மா இயன்றால் வரவும் என்று எழுதிவிட்ட நானே, பின்பு எண்ணி, வேறு யாரையேனும் வந்து பார்க்க ஏற்பாடு செய்தால் நலம் என்றும், அதுவே தேவையென்றும் வலியுறுத்தி எழுதியிருந்தேன். இந்நிலையில் நான் அறிந்தும், அறியாமலும் செய்கிற தவற்றுக்கு அருள் கூர்ந்து வருந்த வேண்டாம் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றபடி, தங்களின் பணியழுத்தங்களில், இவையிவை செய்யலாம் என்றோ, தாங்கள் இதழ்கள் நிறுத்துவதாக எழுதியிருப்பது தொடர்பாக மறுத்து, தொடர்ந்து நடத்தக் கூறவோ, இக்கால் மிக அமைதியாக இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கும் எனக்கு ஒரு சிறு தகுதியேனும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

எனவே தங்கள் சூழல்படி, பணியழுத்தங்களின்படி, சுமையழுத்தங்களுக்கு நடுவில், தாங்கள் முடிவெடுக்கிற எதையும் மகிழ்ந்தோ அல்லது வருந்தியோ மட்டும் நான் கண்டு கொள்ள முடிகிறது. என் செய்வது? என் மன விரைவுக்கு என் உடலும் புறச் சூழலும் உதவவில்லையே!...

இங்கு மதுரை வைப்பகத் தொடர்புச் சிறையாளிகளுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் குற்ற அறிக்கை அளிக்கப் பெற்றது. எனவே எங்களுக்கும் விரைந்து அளிக்கப் படலாம் என எதிர் நோக்குகிறோம். ஒருவேளை அளிக்கப் படுமாயின் எங்களை அங்கு மாற்றுவார்களா எனத் தெரியவில்லை.

ஏது எப்படியாயினும் எங்களால் இயலுகிற அளவிலான கல்வி, எழுத்துப் பணிகளை உள்ளிருந்து செய்துகொண்டிருக்கிறோம்.

அம்மா! தாங்கள் இங்கு வர வேண்டுமென எழுதிவிட்டு, உடனே எழுதியதை அடிக்காமலேயே, எண்ணினேன், நீங்கள் உடனே அப்பாவிற்குத் தொல்லை கொடுத்து இங்கு வரக் கேட்பீர்கள் என்று நீங்கள், அங்குள்ள சூழல் புரிந்துசெயல்படுதல் வேண்டும்.

சேலத்து அம்மா வந்திருப்பதாக அப்பா எழுதியிருந்தார்கள். அம்மா நலமுடன் இருக்கக் கேட்டுக் கொள்கிறேன். அம்மாவை நன்கு புரந்துபேணவும், மகிழ்வாக வைத்திருங்கள். —(26-11-88)

...இங்கு அச்சக நிலைகள் பற்றி எண்ணுகையில் மேலும் வருத்தமாக உள்ளது ...ஈரோட்டு அன்பர்கள் எடுத்துள்ள முயற்சி பற்றி மிகவும் மகிழ்ச்சி. அவர்கள் அதை உறுதியுடனும் நிறைவுடனும் செய்ய வேண்டுமாய் எண்ணுகிறேன்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு நிறுத்தம் பற்றி எழுதியிருந்தீர்கள். அதை முழுமையாக நிறுத்துவது என எண்ணாமல் ஓர் இடைக்கால அளவில் வேண்டுமானால் நிறுத்தி, மீண்டும் மிகப் பொலிவுடன் வரும் என அறிவிக்கிறபடி எண்ணலாம். அதற்கிடையில் அனைத்து அன்பர்களையும் அழைத்து, அது பற்றித் தெளிவான, உறுதியான நடைமுறைக்கு உகந்ததான நிலையில் பேசலாம். சில அடிப்படை நிறைவுத் திட்டங்கள் வகுக்கலாம். அக் கலந்தாய்வு ஒரு முழு நிறைவான பொருள்நிலை, இனிமேலான இபக்கநிலை, இதழ்நிலை பற்றியுமான ஆய்வாக நடத்தப் படலாம்...

அன்புள்ள அம்மா!

...நீங்கள் தாம் எப்பொழுதும் வருத்தப்பட்டுக் கொண்டு இருப்பதாகச் சொன்னார்கள். ஏன் அப்படி உள்ளீர்கள்? நான்தான் திரும்பத் திரும்ப எழுதுகிறேனே. உண்மையிலேயே எங்களுக்குச் சிறு தொல்லை கூட இல்லை.

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

பொருத்தமாக இந்த மொழி மாநிலங்களைப் பிரித்தமைத்தார்கள். எனவே இவை இந்தியத் தேசிய இனங்களுக்கான முழுமை மாநிலங்கள் அல்ல. இந்தியத் தேசிய இனச் சிக்கல் படிநிலை வளர்ச்சியுற்றுத் தேசிய மாநிலங்கள் பிரிக்கப் பெறும் பொழுது அவை சரியான மொழி, இன, வரலாற்றோடும், கலை, பண்பாட்டு நிலைகளோடும் பொருந்தும் படியாக அமைக்கப் பெறும்.

அடுத்து, இந்தியாவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்துமே இந்திய ஒன்றியத்திலிருந்து பிரிந்து போகும் நோக்கத்தை இக்கால் கொண்டிருக்கவில்லை. ஒரு சில மாநிலங்களே அந்நோக்கத்தைக் கொண்டுள்ளனவாக அவற்றின் அரசியல், பொருளியல், இனவியல் செயற்பாடுகளிலிருந்து தெரிய வருகிறது. அதற்குத் தலையாய காரணம், இந்திய மாநிலங்கள் பலவும், இந்தியாவினின்று பிரிந்து தனியே முழு இறைமை பொருந்திய தனியரசை அமைத்துக்கொண்டு முன்னேற்றம் காணும் அளவிற்கு, மொழி, இன, கலை, பண்பாட்டு, வரலாறு, பொருளியல் ஆகிய நிலைகளில் தனித் தன்மைகளும் வலிவும் கொண்டன அல்ல. எனவே, அவை இந்தியாவுடன் தங்களை இணைவித்துக் கொண்டு ஒன்றாயிருக்க விரும்புவதில் வியப்பில்லை. இன்னும் வெளிப்படையாகவும் தெளிவாகவும் பச்சையாகவும் சொல்வதானால், இந்திய ஒன்றியத்திலிருந்து, இக்கால் முழு இறைமையுடன் பிரிந்து போய்த் தனி நாடாக இயங்குவதற்குரிய முழுத் தகுதியும் முழு விருப்பமும் கொண்ட ஒரே நாடு தமிழ் நாடேயாகும். ஏனெனில் இஃது ஒன்றுதான் தனித்தேசிய இன ஆளுமைக்குப் பொருத்தமானதாக உள்ளது. அதற்கு முழுமையான அடிப்படைக் காரணம், தமிழ்நாடு ஒன்றுதான், இந்தியத்தேசிய இனங்களுக்குள்ளேயே, மொழி, இன, நிலம் கலை, பண்பாடு, அரசியல், பொருளியல், வரலாற்று நிலைகளில் முழுத் தனித்தன்மையும், முழு வலிமையும் கொண்ட ஒரு நாடாக உள்ளது. இதை ஒப்ப வைத்துப் பார்க்கும் பொழுது இங்குள்ள வேறு எந்தத் தேசிய இனத்திற்கும் இத்தகுதிகள் குறைவாகவே உள்ளதை ஆய்ந்து உணரலாம். பின்னர் ஏன் அவற்றுள் ஒரு சில இந்திய ஒன்றியத்திலிருந்து பிரிந்துபோய்த் தனித்தேசிய இன நாட்டை உருவாக்க விரும்புகின்றன என்றால், அது, இன்று இந்தியாவை ஆட்சி செய்யும் பார்ப்பனிய வணிக முதலாளிகளின் ஓரினச் சார்பான கொடுங்கோலான ஆட்சித் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாததால்தான் என்க.

இத்தகைய ஆட்சிக் கொடுமை நிலை, இப்பொழுதுள்ள ஆட்சியமைப்பில் என்றுமே மாறாத, மாற்றமுற விரும்பாத தன்மையில் என்றென்றுமே நிலைத்திருக்கும் வலிமைபெற்றதாகும். அவ்வாறு வலிமை குன்றுகிற நேரம் ஒருவேளை எதிர்காலத்தில் வந்தாலும், இவ்வாட்சி இப்பொழுள்ளதைப் போல் உருசியாவையோ, அல்லது அமெரிக்காவையோ சார்ந்து, தன் நிலையை வலுப்படுத்திக் கொள்ள முடிந்ததாக இருக்கும்.

ஆனால் எத்தகைய சூழ்நிலையிலும், தமிழகம் இந்திய ஆட்சியாளருடன், அவர் எத்தகைய உயரிய நோக்கமும் நடுநிலை உணர்வும் கொண்டிருப்பவர்களாக அமைந்தாலும் கூட அவர்களுடன் ஒத்துப் போய் தனித் தமிழ் நாட்டை அமைக்காமல் இருப்பது அனைத்து வகையிலும், தமிழினத்திற்கே கேடு தருவதாகவே முடியும். அதனால்தான் தமிழ் நாடு, தனி நாடாக ஆக வேண்டும் என்று நாம் கரடியாய்க் கத்தி வருகிறோம். அது முடிகிறதோ இல்லையோ இறுதி வரை இந்தக் குறிக்கோளில் தாழ்ச்சி ஏற்பட ஓர் இம்மியளவும் இடமில்லை. இவற்றையெல்லாம் நன்கு விளங்கிக் கொள்ள அறிவில்லாமலும், அல்லது விளங்கிக் கொண்டாலும் விட்டுக் கொடுக்க மனமில்லாமலுமே நம்மில் சிலர் இதனைச் சரியென்று ஒப்புக் கொள்வதில்லை.

அண்மையில் இந்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங் அவர்கள் தேசிய ஒருமைப் பாட்டுக்கெதிராகச் சிலர் பிரிவினைக் கருத்துக் கொண்டிருப்பதாக மிகுதியும் கண்டித்துப் பேசினார். அவரின் அதிகாரச் செருக்கான வரட்டு மிரட்டல் என்றுமே பயன் தராது என்பதைக் காலம் உணர்த்தும். மக்களை அச்சுறுத்தியோ, துன்புறுத்தியோ இந்திய ஒருமைப்பாட்டையோ ஒற்றுமையையோ பெயருக்குக் கூட பூட்டாசிங் போன்றவர்களால் உருவாக்கி விட முடியாது. தமிழகத்தின் விடுதலை முயற்சிகள் ஒருவேளை காலந்தள்ளிப் போனாலும், என்றுமே தவிர்ந்து விடப் போவதில்லை என்பதை உறுதியாக நினைவில் வைத்துக் கொண்டு, இப்பொழுதைய நிலைமைக்கு ஏற்றபடி, ஓர் இடைக்கால ஏற்பாடாகவேனும், பிரிந்துபோகும் உரிமை கொண்ட தேசிய இனங்களின் கூட்டாட்சியையேனும் இந்திய அரசு உருவாக்குவது நல்லது. இந் நாணயமான நடு நிலையான முடிவை எண்ணிப் பார்க்க வேண்டும் அது!

கடனுடன் பிறக்கும் குழந்தைகள்!

வில்லுடன் பிறந்தான் அர்ச்சுனன்; கவச குண்டலங்களுடன் பிறந்தான் கர்ணன் என்பதைப் போல, நடுவண் அரசின் தவறான அணுகு முறை மற்றும் வெளி நாடுகளிலிருந்து ஏராளமாக வாங்கிக் குவிக்கும் கடன்களின் காரணமாக, இந்தியாவில் பிறக்கும் குழந்தைகள் கடனுடன் பிறக்கிறார்கள்!

- சட்டமன்ற உறுப்பினர் — ரகுமான்கான்
(1-4-89 சட்டமன்ற பேச்சில்)

எல்லாச் சிறப்புகளுமே அடித்தள மக்களாலேயே மீட்டெடுக்கப் படவேண்டும்!

நம் நாட்டின் உயிர் நாடி நாட்டுப் புறங்கள். அவை உழவை, வேளாண்மையை நம்பியுள்ளன. தமிழ் நாட்டு வளங்கள் இந்திய அரசின் கைக்குள். இந்திய அரசோ, வல்லரசுகளின் காலடிப் பந்து; இந்த நிலைமையில் தமிழர்களைச் சிந்திக்கத் தூண்டுகின்ற இயக்கங்கள் தோன்றுவது வரலாற்றுக் கட்டாயம் ஆகும்.

இந்தியப் புரட்சியாளர்கள் விடுதலைக்குப் பின், சோவியத்தை, சீனவைக் கற்றறியாமல், அவர்களுக்கிடையே இருந்த வேற்றுமைகளைப் பாராட்டித் தங்களுக்குள் பிளவுபட்டுப் போனார்கள். பின்தங்கிய விளைவு, உறவுகளைக் கொண்ட நம் மக்கள் சாதி மத, கட்சி, அரசியல் பிளவுகளால் மேலும் மேலும் கூறுபட்டுப் போனார்கள்.

தேசிய இன எழுச்சியை மறுத்து, அயலாரின் அடிமையாகிப் போனார்கள். எனவே, மக்களின் தேவைகள் புறக்கணிக்கப் பெற்றன.

தமிழகத்தின் சீரிய பெருமைகளை வளர்ப்பதை விட ஆங்கில வழி பெற்ற அறிவைச் சிறப்பெனக் கொண்டனர். அந்த வகையில் பெற்ற குப்பைகளையும் கொண்டாடத் தலைப்பட்டார்கள்.

வள்ளுவன், இளங்கோ, கம்பனை விட, ஓமரிடம், சேக்சுபியரிடம், மில்டனிடம்...இன்னும் பெயர் தெரியாத 'பெருமகன்'களிடம் அடைக்கலம் புகுந்தார்கள்.

15-5-87. கி. ஆ. பெ. விசுவநாதம் 12 ஆம் 'தமிழிசைச் சங்க விழா'வில் பேசும்போது, நாட்டுப்புறங்களில் இசை பரப்ப ஆவன செய்யும்படி கேட்டுள்ளார். இன்று நம் இசையறிவு திரைப்பட அரங்குகளில்தான் வளர்க்கப் படுகின்றது. அதன் வீச்சு, மரபுரிமையுடைய நாட்டுப்புறப் பாடல்களைக் 'கலக்கல் மது' மயக்கம் தரக்கூடியவைகளாக மாற்றி வருகின்றன!

உழவர்கள் வயலோரங்களில்—காடு கழனிகளில் வளர்த்த 'தமிழிசை' வானொலிப்பெட்டிகளுக்குள் வதைபடுகின்றன. அவர்களின் நாக்குகள் அவற்றோடு இணைக்கப்பட்டு விட்டன.

அரசியல், பொருளியல், பண்பாடு யாவும் உழவர்களால் எழுச்சி பெறுங்காலமே புரட்சி மிக்க காலமாகும் என நம்பலாம்!

--பறம்பை அறிவன்.

தலையெடுத்தான் தம்பி!

பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு.

எடுப்பு

தலையெடுக்க வேண்டும்—ஒருவன்
தலையெடுக்க வேண்டும்.

தொடுப்பு

விலைகொடுத்து விடுதலைக்கே
வீரன் பிரபாகரன் எழுந்தது போல (தலை)

முடிப்பு

அமிழா உணர்வுடன் ஆண்மை காட்டி
அடிமை விலங்கை அடித்து நொறுக்கித்
தமிழகத்தை மீட்பதற்குத்
தடந்தோள் உயர்த்தித் தானை நடத்த(தலை)

என்றன் மக்கள் எண்ணம் புரிந்தே
எழுந்தான் ஒருவன் இங்குப் புயலாய்!
வென்று நாட்டை மீட்பதற்கு
விம்மித் தோள்கள் புடைத்தெழுந்து! (தலை)

———

தலையெடுத்தானே — பொழிலன்
தலையெடுத்தானே!

குலையா துறுதி கொடுமை சாய்த்துக்
கொற்றம் தன்னை மீட்பதற்குத் (தலை)

எத்துகின்ற வடபுலம் அவனை
இரும்புக் கம்பிச் சிறையில் அடைத்தது!
நத்திப் பிழைக்கும் நாய்கள் மகிழ!
நமக்கிது புதிதில்லை நடுங்கோம் அஞ்சோம்!
(தலை)

மாங்குயில் கூவுபூஞ் சோலை; எம்மை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்று
வீங்குதோள் மறவன் வீறுகொண்-
டெழுந்தான்.
விடுபடும் அவனால் தமிழகம் நாளை! (தலை)

ம. கோ. இரா. ஒன்றுதான்! மற்றவர்கள் சுழியங்கள்தாம்!

ம. கோ. இரா. தாம் ஒன்று. அவருடனிருக்கும் அனைவரும் சுழியங்களே என்று அவர் இருக்கும் பொழுது தன்மானமின்றியும் அவரை உயர்த்திச் சொல்லும் நோக்கத்திலும் மெய்ப்புதலையாகச் சொன்னார்கள், அவரின் கொத்தடிமை அமைச்சர்கள். ஆனால் அதே போல் நடந்தேறி விட்டது. ம.கோ. இரா.வின் பெயரைச் சொல்லி ஒப்பாரி கேட்கப் பெற்றது. ஆனால் இருப்பவர் வெறும் சுழியங்களே என்பதை மெய்ப்பித்துக் காட்டி விட்டனர், மக்கள்!

Scanned with CamScanner

(தொடர் : 2) (முன் இதழ்த் தொடர்ச்சி)

குடமுருட்டியிலிருந்து கொடைக்கானல் வரை..!

தமிழ்நாடு விடுதலைப் படைகளும் இந்தி(ய)ப் பாசிசக் கும்பலும்!

-- செ. அமிழ்தன் --

அதே போல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கருநாடகத்தை ஆண்ட **சிக்கதேவ மகராயன்** காவிரியின் குறுக்கே பல அணைகளைக் கட்டிக் காவிரியின் நீர் வரத்தைத் தடுத்தான். அதை அப்பொழுது மதுரையை ஆண்ட பெண்ணரசி **இராணி மங்கம்மாள்** படையெடுத்துச் சென்று அணைகளை உடைத்து மீண்டும் காவிரியாற்றைத் தமிழகத்திற்குள் பாய்ந்தோடச் செய்தாள். **இந்தப் பழைய மன்னராட்சிக் கால அவலங்களில் மறைந்திருப்பது நாடுகளைப் பணிய வைத்து நாடு பிடிக்கும் கொடிய ஆளுமை வெறிக் கொள்கையே ஆகும். இக்கொடிய வெறியின் வெளிப்பாடுகளே மலைகளைக் கட்டியதும், அணைகளைக் கட்டியதும் ஆகும்.**

இம்மன்னராட்சிக் கால அவலங்கள் அக்காலத்துடனேயே ஒழிந்து விடவில்லை. அவை மன்னர்களின் ஆளுமைக்கு முடிவு கட்டிய ஆங்கில வந்தேறிய ஆட்சியிலும், அது விட்டுச் சென்ற இந்தி(ய) உயர்குடியாட்சி முறையிலும் தொடர்ந்து நீடித்தே வந்துள்ளன; வருகின்றன.

காவிரி நீர் உரிமைச் சிக்கலும், அது தொடர்பான உடன்பாடுகளும்:

ஆங்கில வந்தேறிகளின் ஆட்சியில் தன்னாளுமையுரிமைப் பெற்றிருந்த கருநாடக மைசூர் அரசு, கி.பி. 1850 அளவில் காவிரியாற்றின் கிளையாறுகளில் தன் விருப்பப் போக்கில் பல பாசன மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தத் தொடங்கியது. அது கண்டு அச்சம் கொண்ட ஆங்கில ஆட்சிக்குட்பட்ட சென்னை மாகாண அரசு தனது எதிர்ப்பை ஆங்கில வந்தேறிய இந்திய அரசிடம் தெரிவித்தது. இதன் விளைவாகப் பல பேச்சுரைகள் நடந்து, இறுதியாக 1892-இல் கருநாடக மைசூர் அரசிற்கும், சென்னை மாகாண அரசிற்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அந்த உடன்பாடு, **"தமிழகத்திலுள்ள பாசனப் பகுதிகளைத் தாக்காத வகையிலேயே மைசூர் அரசு தனது மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்"** என்று அறிவுறுத்தியது. இதன் பயனாக காவிரிநீர் சில ஆண்டுக் காலம் தமிழகத்திற்கு முறையே கிடைத்து வந்தது.

இந்நிலையில் இனவெறி மீண்டும் தலைக்கேறிய கருநாடக அரசு 1909-இல் காவிரியின் குறுக்கே கண்ணம்பாடியில் ஓர் அணையைக் கட்டும் திட்டத்தைத் தமிழகத்தைத் தாக்கும் வகையில் முன் வைத்தது. அதனால் அதே காலத்தில் தமிழக, சென்னை மாகாண அரசும், மேட்டூரில் ஓர் அணையைக் கட்டும் திட்டத்தை முன் வைத்தது. இவ்விரு திட்டங்களின் நோக்கங்களும் வெவ்வேறானவை ஆகும். சென்னை அரசின் திட்டம், காவிரியின் நீரை முறையே தேக்கிப் பயன்படுத்துவதாகும். மைசூர் அரசின் திட்டமோ, காவிரி நீரைத் தடுத்துத் தமிழக மக்களைத் தாக்குறச் செய்து நலிவு அடையச் செய்வதாகும். ஆனால், ஆளுமை வெறி கொண்ட ஆங்கில வந்தேறிய இந்திய அரசு நடுநிலை தாங்குவதாகக் கூறி இரு திட்டங்களுக்கும் தடையிட்டு இழுத்தடித்தது. இதற்குப் பின்னர் 1924-ஆம் ஆண்டில் ஓர் உடன்பாடு உருவாயிற்று. அதன்படி **"தமிழகத்தில் இன்றுள்ள (அதாவது 1924-ஆம் ஆண்டைய) உழவு நிலங்களுக்குரிய தண்ணீர் கொடுப்பது தாக்கப்படாத வகையிலேயே காவிரியில் ஓடிவரும் மிகுதி நீரை (Surplus water) கருநாடக அரசு கண்ணம்பாடி அணையில் தேக்கி வைத்துக் கொள்ளலாம்"** என ஒப்புதல் கிடைத்தது. இதனால் கண்ணம்பாடியில் கிருட்டிணராச சாகர் அணைக் கட்டப்பட்டது இவ்வுடன்பாட்டின்படியே மேட்டூர், அமராவதி, நொய்யல் போன்ற இடங்களில் தமிழகத்தில் காவிரி நீரைத் தேக்க அணைகள் கட்டப்பட்டன. மேலும் **இவ்வுடன்பாட்டில் தமிழகம் தமக்குரிய நீராக எவ்வளவு நீரைப் பெற்றுக் கொள்வது என்ற அளவும் தீர்மானிக்கப்பட்டது, அத்துடன் ஐம்பது (50) ஆண்டுகளுக்குப் பிறகு, அன்றுள்ள நிலைமைகளின்படி (அதாவது 1974 இல் உள்ளதற்கேற்ப) இவ்வுடன்பாட்டைத் திருத்தியமைத்துக் கொள்ள வேண்டும் என்ற வழியும் திறக்கப்பட்டது.** இவ்வுடன்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்தது 1892-இல் ஏற்பட்ட உடன்பாடேயாகும்.

இவ்விரு உடன்பாடுகளின் (1892-1924) மூலம் ஓரளவு தீர்வு காணப்பட்ட காவிரி நீர் உரிமைச் சிக்கல் ஆங்கில வந்தேறிகளிடமிருந்து

Scanned with CamScanner

விடுபட்டு 1947-இல் உருவாகிய "தில்லி இந்தியா"வின் (India of Delhi) கீழடங்கிய கருநாடக மாநில அரசின் தீவிர இனவெறியால் மீண்டும் 1950-களில் தலைதூக்கியது. இதனால் படிப்படியாக உடனபாடுகள் மீறப்பட்டு 1958-இல் கபினிநீர்த் திட்டத்தைச் செயற்படுத்த கருநாடக அரசு முனைந்தது. இதையெதிர்த்துப் புதிய தில்லி இந்தியாவின் பாதந்தாங்கித் தமிழக மாநில அரசு, தனது பேச்சுரைகளைத் தொடங்கியது. அப்பேச்சுரைகள் யாவும் இறுதியில் தோல்வியையே எட்டின. இவ்வாறு பேச்சுரைகள் நடந்து வரும் போதிலும் அவற்றிற்கு மதிப்பளிக்காது, 1966-இல் கருநாடக அரசு ஏமாவதி அணையைக் கட்டியது. எனவே தமிழக பாதந்தாங்கிகள் தங்களுடைய ஆண்டைத் தில்லியரசிடம் "1924-ஆம் ஆண்டின் உடன்பாட்டைக் கருநாடக அரசு மீறி விட்டது. எனவே தலையிட்டு முடிவு காணுங்கள்" என்றெழுதி மன்றாடத் துவங்கினர். ஆனால் ஆளுமை வெறி கொண்ட இந்தி(ய)த் தில்லி-அரசோ தான் நடுநிலையில் இருந்து முடித்து வைப்பதாகக் கூறி, 1968-இல் முத்தரப்புப் பேச்சுரையை நடத்தியது. அப்பேச்சுரையில் தீர்வு எதுவும் கிட்டாததால், தமிழக மாநில அரசு 1971-இல் நடுவண் தில்லியரசையும், கருநாடக மாநில அரசையும் தன் எதிராளிகளாக நிறுத்தி, நடுவர் குழு ஒன்றை அமைத்துத் தீர்ப்பளிக்கக்-கோரி, உச்ச நெறி மன்றத்தில் (Supreme Court-of India) ஒரு வழக்கைத் தொடுத்தது. ஆனால் அவ்வழக்கு அன்றைய இந்தி(ய)த் தலைமையமைச்சர் இந்திராவின் கருத்துரையின் பேரில் அன்றைய தி. மு. க. அரசினாலேயே திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது. (இந்த அரசைத் தமிழர் அரசு எனவும், ஆட்சியைத் தன்மானத் தமிழன் ஆட்சி எனவும் பிதற்றிப் புகழ்ந்துரைக்க தமிழக முதலாளியக் கும்பல் தயங்குவதில்லை) இதுவே அன்றும் இன்றும் மாநில அரசுகளின் நிலை.

அப்பொழுது பாசிச இந்திரா காந்தி அவர்கள் தி.மு.க. அரசிடம் கூறியது போலவே அமைக்கப்பட்ட "காவிரிச் சிக்கல் உண்மை அறியும் குழு" தனது ஆய்வறிக்கையை 1972-இல் வெளியிட்டது. அவ்வறிக்கை "கருநாடக அரசு தமிழகத்திற்கு அளித்து வரும் காவிரி நீர் போதுமானதன்று. அந்த நீரைத் தமிழ் நாடு அரசு முறையாகப் பயன்படுத்தி வருகின்றது. மேலும் தமிழ்நாடு காவிரி நீரை வீணாக்குவதாகக் கருநாடக அரசு கூறும் குற்றச்சாட்டு பொய்யானதே ஆகும்" என்றும் எடுத்துக் கூறியது. ஆனாலும் கன்னட இனவெறி தலைக்கேறிய கருநாடக அரசு தமிழகத்திற்குரிய நீர்ப் பங்காகிய 490-டி.எம்.சி அளவு நீரை அளிக்க மறுத்து "160 டி.எம்.சி. அளவு நீரையே அளிக்க முடியும். அதற்கு மேல் ஒரு துளியளவு நீரைக்கூடத் தமிழகத்திற்குத் தர முடியாது" என்று அறிவித்துவிட்டது. அத்துடன் 1924-ஆம் ஆண்டைய உடன்பாடு முடிவடைந்து விட்டதாகவும் கூறி வருகின்றது. எனினும் கடந்த 20 ஆண்டுகளாக அவ்வப்போது இரு மாநில அரசுகளுக்கு இடையேயும், நடுவண் தில்லியரசுக்கு இடையேயும் பேச்சுரை நாடகங்கள் நடத்தப்பட்டு வந்துள்ளன; அவை இப்பொழுதும் தொடர்கின்றன. இதனால் காவிரி நீர்ச் சிக்கல் கிணற்றில் போடப்பட்ட கல்லாய் உறங்கிக் கொண்டு தீர்க்கப்படாமல் இருந்து வருகின்றது. எனவே தஞ்சை மாவட்டம் தற்போது பாலைநிலம் போல் மாறிக் காட்சியளித்துக்கொண்டு வருகின்றது.

கவலையான காவிரி நீர்ச் சிக்கலும், ஆடம்பரமான பண்பாட்டு மையமும்:

இவ்வாறு தமிழக மக்களின் வாழ்வியலோடு ஒட்டியுள்ள ஒரு சிக்கல், அது தஞ்சை மாவட்ட மக்களின் வாழ்வை உருக்குலைத்து வரும் வேளையில், அச் சிக்கல் பல்லாண்டுக் காலமாகத் தீர்க்கப் படாமல் தொடர்ந்து நீண்டு வரும் வேளையில், அதைத் தீர்த்து வைக்க முன் வராத வக்கற்ற இந்தி(ய) பாசிசக்கும்பல், தனது தமிழகப் பாதந்தாங்கிகளின் துணையுடன் இந்தி(ய)ப்பண்பாட்டினை இந்துமதப் பண்பாடு காக்கப் போவதாகக் கூறிப் பத்துக் கோடிகளுக்கு மேலான மக்களின் வரிப் பணத்தை வாரியிறைத்துத் — தங்களுடைய ஆடம்பரப் பாசிசக் கூச்சல் பண்பாட்டைக் காக்க "தென்னகப் பண்பாட்டு நடுவம்" ஒன்றைத் திறந்து வைக்கப் போவதாக மக்களுக்கு அழைப்பு விடுத்தது.

இப்போக்கு உண்மையிலேயே உழைக்கும் மக்களுக்கு வெறுப்பைத் தரக்கூடிய பொறுப்பற்ற போக்கே ஆகும். தமிழகத் தஞ்சை மாவட்ட மக்கள் தில்லி நடுவணரசிடமும், தமிழகப் பாதந்தாங்கிகளிடமும் தங்கள் காதுகளை இசையால் மூழ்கடிக்கக்கோரி மன்றாடவில்லை. வறுமைக் கடலில் மூழ்கும் தங்கள் வாழ்வு வளம் பெறத் தங்களின் பசியைப் போக்கத் தமிழகத்திற்குரிய பாசன நீர்ப் பங்கைப் பெற்றுத் தரக்கோரியே மன்றாடினார்கள். ஆனால் உரோம் (Rome) நகரம் பற்றியெரிந்தபோது நீரோ மன்னன் பிடில் இசைத்ததைப் போல், பாசிச இராசீவ் கும்பல் தங்களுடைய பாசிசப் பண்பாட்டைக் கட்டிக் காக்க முனைந்தது. அதற்காகவே அது தென்னகப் பண்பாட்டு நடுவத்தைத் திறந்து வைக்க நினைத்தது. இந்த நடுவத்தைத் திறந்து வைப்பதன் மூலம் உரிமைக்குப் போராடும் உழைக்கும் மக்களின் நரம்புகளையே இசைக் கருவிகளின் நரம்புகளாகக் கட்டி இசை மீட்ட எண்ணியது பாசிசக்கும்பல். உழைக்கும்

அமெரிக்க அரசின் கருத்து: இந்தியப் படைகள் இலங்கையில் கொடுமை செய்கின்றன!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

அண்மையில் அமெரிக்க அரசு இலங்கையில் நடக்கும் மாந்த உரிமைத் தாக்கங்கள் (Human Rights Violations) குறித்த அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கை (Report) இந்தியப் படைகள் இலங்கையில் விளைக்கும் கொடுமைகள் குறித்தும் கருத்துத் தெரிவித்துள்ளது. அக்கருத்துகள் சிலவற்றின் தமிழாக்கத்தைக் கீழே தருகிறோம்.

"இந்தியப் படை தமிழ் பெண்கள் பலரைக் கற்பழித்துள்ளது."

"யாழ்ப்பாணத்திலுள்ள செய்தித் தாளிகைகள் இந்தியப் படையைப் பற்றி நல்லபடியாக எழுத வேண்டுமென்று அத்தாளிகையாளர்களை இந்தியப் படை வற்புறுத்துகிறது" (அஃதாவது, தங்களுக்கு அடக்கமான இந்திய வானொலி, வானொளியைப் (Indian Radio and Television) போலவே, யாழ்ப்பாணத்திலுள்ள தாளிகைகளும் பொய்ச் செய்திகளை அச்சிட வேண்டுமென்று இந்தியப் படை வற்புறுத்துகிறது).

"இந்தியப் படை ஐந்நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்களை **எவ்வகைக் காரணமும் காட்டாமல் சட்ட முறைகட்கு மாறாகக் காவலில் வைத்துள்ளது.** தமிழ்ப் போராளிகள் மட்டுமல்லாமல், தமிழீழ விடுதலை வேண்டுமென்ற கருத்துக் கொண்ட" (ஆனால் எந்த வகையான போராட்டங்களிலும் ஈடுபடாத) "தமிழ்ச் செய்தியாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் தொழிலுரிமையாளர்களும் (Businessmen) இந்தியப் படையினரால் காவலில் வைக்கப் பட்டுள்ளார்கள்."

"இவ்வாறு காவலில் வைக்கப்பட்டுள்ளோர், இந்தியப் படையினரால் 'உடற்சிதைவு' கட்கு (சித்திரவதை), (Torture) ஆளாகிறுர்கள்."

கட்டுரையாசிரியரின் பின் குறிப்பு: முப்பதாண்டுகட்கு மேலாகச் சிங்களவர்கள் தமிழ் மக்களைக் கொடுமைப் படுத்தி வந்தார்கள். தமிழ் மக்களைக் கொல்வது, தமிழர் சொத்துகளைக் கொள்ளையடிப்பது, தமிழ்ப் பெண்டிரின் மார்பகங்களை அரிவாளால் அறுத்தெறிவது, தமிழ்ப் பெண்டிரைக் கற்பழிப்பது ஆகிய காட்டுவிலங்காண்டித் தனங்களில் ஈடுபட்டார்கள். இந்நிலை களைக் கண்டு மனங்குமுறி, இக்கொடுமைகளினின்று நிலையாக இலங்கைத் தமிழர்களை மீட்பதற்கு ஒரே வழி **விடுதலை பெற்ற தமிழீழம் தான்** என முடிவு கொண்டு, தமிழீழ விடுதலைப் போர் தொடுத்தனர் தமிழீழ இளைஞர்கள். ஒப்புரவுப் பேச்சு என்ற நாடகம் போட்டு, அவ் வீரத்தமிழ் மறவர் தம் விடுதலை முயற்சிகட்கு முட்டுக்கட்டை போட்டது, வடஇந்திய அரசு. ஆனால், விடுதலைப் போர் தொடர்ந்து நடந்து வருவதையும், **தமிழீழ விடுதலைப் புலிகளை வென்றிடும் வலிமை சிங்களவப் படைகட்கு இல்லாததையும்** கண்ட வடஇந்திய அரசு, தனது படையைப் (இந்தியப் படையை) பெருமளவில் ஈழத்துக்கு அனுப்பி வைத்தது. பல நூறு விடுதலைப் புலிகளைக் கொன்றது மட்டுமல்லாமல், ஆயிரக்கணக்கான தமிழ்ப் பொது மக்களையும் கொன்று குவித்தது இந்தியப் படை. **எவ்வகை வன்முறைகளிலும் ஈடுபடாத,** ஆனால் தமிழீழ விடுதலையை விரும்பும் எழுத்தாளர்களையும், தொழிலாளிகளையும், தொழிலுரிமையாளர்களையும், ஆசிரியர்களையும் காவலில் வைத்துக் கொடுமைப் படுத்துகிறது. முன்னாளில் சிங்களவப் படை தமிழ்ப் பெண்டிரைக் கற்பழித்தது. இன்று வடஇந்தியப் படை தமிழ்ப் பெண்டிரைக் கற்பழிக்கிறது. இக்கொடுமைகளை இந்திய அரசு எவ்வளவு தான் மூடி மறைத்தாலும், அவற்றைப் பிறநாட்டு அரசுகள் கண்டு, கண்டிக்கின்றன.

இலங்கைத் தீவிலுள்ள தமிழ் மக்கள் தன்மானத்துடனும், பாதுகாப்புடனும் நிலையாக வாழ ஒரே வழி விடுதலை பெற்ற தமிழீழம் தான். **போரில் தன் படைகள் பெற முடியாத வெற்றியை, ஒப்புரவுப் பேச்சு என்ற பொய் நாடகத்தின் வழி காண முயல்கிறது வடஇந்திய அரசு.** இதனால்தான் இந்த **வெற்றுப் பேச்சுகளை** விடுதலைப் புலிகள் விரும்புவதில்லை. இந்தியப் படையையும், சிங்களவப் படையையும் ஈழத்தினின்று துரத்தி விட்டுத் தமிழீழ விடுதலை பெறுவதே தமிழீழ விடுதலைப் புலிகளின் குறிக்கோள் என நம்பு-

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் உப்பேறிய தோல்களையே ஓசைக் கருவிகளின் தோலாகக் கட்டி ஓசைச் சுவை தேட எண்ணியது ஒட்டுப் பொறுக்கிகளின் கும்பல். இதற்காகத் தங்களுடைய கூச்சல் கத்தல்களுக்குப் 'பண்பாடு' எனப் பட்டங்கட்டி மக்கள் பண்பாட்டை ஒரு சந்தைக்குரிய (Market) சரக்காக்கி மகிழ்ந்து வாழ்வின் விடியலை நோக்கிக் காத்திருந்த மக்களுக்கு வாய்க்கரிசி போடும் செயலையே செய்து காட்ட வேண்டும் எனத் துடித்தது. இவற்றின் மொத்த விளைவே பாசிசத் "தென்னகப் பண்பாட்டு நடுவம்".

—(தொடரும்)

Scanned with CamScanner

அ.தி.மு.க. ஆட்சியின் அலங்கோலங்களும் கொள்ளைகளும்!

அண்ணா தி.மு.க. ஆட்சி தமிழகத்தை மிகவும் இழிவான நிலைக்குக் கொண்டு போனதைக் கீழ்வரும் செய்திகளும் செயல்களும் உறுதி செய்கின்றன.

அந்த ஆட்சியின் அலங்கோலங்கள், நெறி பிறழ்ந்த நடைமுறைகள் ஏராளம்! அவற்றுள் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகிறோம்.

O இந்திரா நகரில் நடந்த பிரேமா, கொலை வழக்கு என்ன ஆனது என்றே தெரியவில்லை. அ'து ஒரு மருமமாகவே போய் விட்டது.

O எரிசாராய ஊழல் வழக்கு எரிந்தே போய் விட்டது.

O திருச்செந்தூர் கோவில் அதிகாரி கொலை வழக்கு, ஒன்றும் இல்லாமலே ஆகிவிட்டது.

O திரைப்பட நடிகை 'படாபட்' செயலட்சுமி சாவின் முடிவுதான் என்ன? யாருக்குத் தெரியும்?

O கோயில் நகைக் கொள்ளையர்கள் மீது பரபரப்பாக நடந்த உசாவல்கள் என்ன ஆயினவோ?

O சந்தனக் காடுகளை அழித்துக் கோடி, கோடியாய்க் கொள்ளை அடித்தார்கள், யார் கேட்டார்?

O தனியார் தொழில் கல்லூரி, மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் பல கோடி உருபா கையூட்டுப் பெற்று, முறைகேடாக அரசு அனுமதி வழங்கினார்கள், யார் தடுத்தார்?

O சாராய புட்டியலில் ஆண்டில் 24 கோடி கொள்ளை! யார் கண்டு கொண்டார்?

O சிற்றூர்ப்புற (கிராம) அதிகாரிகள் தேர்வில் பல கோடி ஊழல்!

O தமிழ் நாட்டில் 'டான்சி' நிறுவனங்கள் பலவற்றை மூடி விட்டனர். கோடிக் கணக்கில் இழப்புக் கணக்குகள் காட்டினர். இந்த இழப்பெல்லாம் யார் தலையில் விடிந்தது? மக்கள் தலையில் விடிந்தது.

O கப்பல் பேரஊழலின் நடவடிக்கைதான் என்ன ஆயிற்று?

O தெலுங்கு கங்கைத் திட்டத்தில் தமிழகத்தில் பல கோடி உருபா முடக்கம்? யாருக்கு ஊதியம்?

O காவல்துறை அதிகாரிகள் தேர்வில் அமைச்சர்கள் அடித்த கொள்ளைகளுக்குக் கணக்கேது?

O அமைச்சர்கள் நடத்திய போலிப் பேருந்துத் தடங்கள்தாம் எத்தனை?

O போலிப் பெயர்களில் தொடங்கிய பல திரைப் படக் குழுமங்கள்தாம் எத்தனை?

O தமிழகத்தில் உள்ள நடிகைகள் பலர் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பலகோடி உருபாக்கள் கொள்ளை அடித்தனர்.

O வாடகை வீட்டில் வாழ்ந்த நடிகைகள் அம்பிகா, இராதா ஆகிய நடிகைகள் 50 கோடி உருபாவுக்குச் சொத்துகள், திரைப்படப் பிடிப்பகங்கள் வளமனைகள் கட்டியதெல்லாம் எப்படி நிகழ்ந்தன. மறைந்த முதலமைச்சர். ம. கோ. இராவுக்குத் தாம் வெளிச்சம்!

O வீட்டு வசதி வாரியத்தின் வீடுகள், நிலங்கள் எல்லாம் எத்தனை அ. தி. மு. க. செயலாளர்கள் பெயர்களில் மாற்றம் கொண்டன என்பவெல்லாம் பொது மக்கள் எப்படி உணர முடியும்.

O எத்தனையோ சட்டமன்ற உறுப்பினர்கள் திரைப்படக் கொட்டகை கட்டுகிற அளவுக்கு அரசுப் பணத்தில் எத்தனைத் திருவிளையாடல்கள்!

O ம. கோ. இரா. மருத்துச் செலவிலும் கோடிக் கணக்கில் கொள்ளையடிக்கப் பெற்றது!

O தேர்தலில் இடங்கள் தருவதாக ஏறத்தாழ 500 பேர்களிடம் தண்டிய பலகோடி பணம் எங்கு போயிற்றோ?

(அடிப்படை: 'புரட்சிவேந்தன்' 19-2-89).

(முன்பக்கத் தொடர்ச்சி)

கிறேன்: விடுதலைப் புலிகளின் மறைந்துறை போரை (கொரில்லாப்போர்) எதிர்த்து வெற்றி பெறும் ஆற்றல் இந்தியப் படைகட்குக் கிடையாதென நியூசுவீக்கு (Newsweek) என்ற அமெரிக்கக் கிழமையிதழும், நியூயார்க்கு டைம்சு (New York Times) என்ற அமெரிக்க நாளிதழும் கருத்துத் தெரிவிக்கின்றன. வியத்நாமியரின் மறைந்துறை போருக்கு ஆற்ற மாட்டாமல் அமெரிக்கப் படை வியத்நாமை விட்டு வெளியேறியது போல, ஆப்கானியரின் மறைந்துறை போருக்கு ஆற்ற மாட்டாமல் உருசியப்படை ஆப்கானித்தானை விட்டு வெளியேறியதுபோல, தமிழீழ விடுதலைப் புலிகளின் மறைந்துறை போருக்கு (கொரில்லாப் போர்) ஆற்ற மாட்டாமல் வடஇந்தியப் படைகளும், சிங்களவப் படைகளும் ஈழத்தை விட்டு வெளியேறுவது திண்ணம்.

வெல்க விடுதலைப் புலிகள்!

ஒழிக இந்திய—சிங்களவக் கொடுமைகள்!

Scanned with CamScanner

(தொடர் 4.) (117-ஆவது இதழ்த் தொடர்ச்சி)

தமிழ்த் தேசத்தின் திரிபாளர்கள் (Revisonists) யார்?

இட ஒதுக்கீடு — தொலைக்காட்சியிலும், வானொலியிலும், இந்திய அரசு அலுவலகங்களிலும் பார்ப்பனர் எத்தனைப் பேர், பார்ப்பனர் அல்லாதார் எத்தனைப் பேர்? —

—என்று கேள்விகள் கேட்டு அதன் மூலம் எழுச்சி பெற்று வருகிற இளைஞர்களைத் தம் கழகத்துக்குள் கொண்டு வந்து காயடிக்கின்றது.

இன்றைய முதல் சிக்கல்—தமிழ் நாட்டு விடுதலையே—என்பதை இக் கட்டுரையில் ஓரளவு கண்டோம்.

அப்படியிருக்க, இந்தியத் தொலைக்காட்சியில், வானொலியில், இந்திய அலுவலகங்களில் பார்ப்பனர் எத்தனைப் பேர், தமிழர் அல்லது பார்ப்பனர் அல்லாதார் எத்தனைப் பேர் என்பதன்று, இன்றைய சிக்கல்...

இந்தியத் துணை வல்லரசுக்கும், அதன் கொள்ளைக்கும், அதன் போலி, பொய்க் கருத்துப் பரப்புதலுக்கும், அதன் அதிகார வெறித்தனத்திற்கும் உதவுகிற தொலைக் காட்சியோ, வானொலியோ, அதன் அலுவலகங்களோ இங்கு எதற்கு—என்பதே இப்பொழுதுள்ள சிக்கல்.

அதை மூடி மறைக்கவே, அதைச் சொன்னால், அதற்கான போராட்டத்தை எடுக்க வேண்டி அதனால் ஏற்படும் தாக்குதல்களைச் சமாளிக்க வேண்டுமென அஞ்சியே, இந்தத் திராவிடர் கழகத் தலைமைகள் இன்றைக்கும் அந்த இட ஒதுக்கீட்டைப் பிடித்து அழுது கொண்டு, தமிழ்நாட்டு விடுதலைப் போராட்டத்தைப் பூசி மெழுகுகின்றனர்.

'சங்கராச்சாரியின் கொடும்பாவி'—என்று எரிக்கிற இவர்கள், பெரியார் நடத்திய இந்தியப்படஎரிப்புப் போராட்டத்தை நடத்தத் தயங்குகின்றனர்.

இந்தியத் துணை வல்லரசை எதிர்க்கத் துணிவற்ற இவர்கள் இந்தப் பார்ப்பனியத்தைத் தூக்கிப்பிடிக்கும் ஒருவனின் கொடும்பாவியை எரிப்பதே 'துணிவு' (!) என்று கூறி உண்மையான போராட்டத்தைத் திசை திருப்புகின்றனர்.

எனவே, இவர்களே தமிழ் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கான முகாமையான 'திரிபாளர்கள்'-என்பதை நாம் தெளிவாகக் காண முடிகிறது.

—எனவே இவ் வகையிலான, இத் தன்மையைச் செய்கிற இத்தலைமைகளைப் புறக்கணிக்கிற, அவர்களின் முகத்திரைகளைக் கிழிக்கிற மிகப் பெரும் பொறுப்பும் தமிழ் நாட்டுப் புரட்சியாளர்களுக்குக் கட்டாயம் உண்டு.—எனவே நாம்,

—இந்தியத் துணை வல்லரசாகிய நம் எதிரியை எதிர்க்க,

—அவ்வரசின் ஆளுமைக்குத் துணையாக நிற்கும் நம் இனத்தினரை இரண்டகர்களாகவும்,

—நம் இன முன்னேற்றத்திற்கு ஒரு வகையில் ஒரு காலகட்டம் வரை துணையாக இருக்கக்கூடிய நிலையில், இன்றைக்குப் பொது எதிரியான இந்தியத் துணை வல்லரசை எதிர்க்க எண்ணுகிற தமிழ்த்தேச முதலாளிகளை ஆதரவாளர்களாகவும்,

—இவ் வகைப் போராட்டத்தை உதட்டளவில் பேசி, நடைமுறையில் அதற்கெதிராக இயங்குகிற திரிபாளர்களையும்,— இனங்கண்டு போராடுவோம்!

வெற்றி பெறுவோம்!

அடைவோம் தமிழ்நாட்டு மக்களின் விடுதலையை!

(பி. கு: இக்கட்டுரை மேலும் விளக்கமாகத் தனி நூலாக வர இருப்பதால், இதில் முரண்பாடான கருத்து இருப்பின் அதை அறிந்து கொண்டு, தவறு இருப்பின் மாற்றிக் கொள்ள எண்ணுகிறோம். முரண் கருத்துகளை வரவேற்கிறோம்.)

'குத்தீட்டி'

இந்துக் கடவுளர் அருவருப்பு வாழ்க்கை!

அறிஞர். பி. ஆர். அம்பேத்கர் எழுதிய இராமனும், கிருட்டிணனும்-ஒரு புதிர் 'இந்து மதம் ஒரு புதிர்' என்னும் பொத்தகங்களிலிருந்து:

O இந்துக் கடவுளான கிருட்டிணனுக்கு 16,108 மனைவிகளும், 1,80,000 குழந்தைகளும் இருந்தன. ஒவ்வொரு நாளும், மனைவி ஒருத்தியுடன் வாழ்ந்தாலும் கூட, மறுமுறை அவளைச் சந்திக்க 44 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். மேலும், பெண் ஒருத்திக்குக் குழந்தை பெறும் தகுதியானது 35 ஆண்டுகளுக்கு மட்டுமே உண்டு. ஆனால், கிருட்டிணன் 1,80,000 குழந்தைகளைப் பெற்றது எப்படி—என்பது குறித்து நாம் எந்த வகைத் திறனாய்வும் செய்ய விரும்பவில்லை, (DR. B. R. Ambedkar "RIDDLE OF RAMA and KRISHNA" 1988 DSA).

O பார்ப்பனக் கடவுளர்களில் முதன்மையானவராகக் கூறப்படும் 'பிரம்மா' என்பவர், தம் சொந்த மகள் சதரூபாவையே மணந்து கொண்டார். மேலும், இது போன்று தம் சொந்த மகள்களை மணம் செய்து கொண்ட தந்தைகளைப் பற்றிய பல செய்திகள் புராணங்களில் உள்ளன. (RIDDLES IN HINDUISM, 1989 Maharashtra Central Press. P. 296.)

O இந்துக் கடவுள் கிருட்டிணன், இராதாவுடன் வாழ்ந்தான். ஆனால் அவள் அவனுடைய மனைவி இல்லை. இராதை ஓர் அய்யனின் மனைவி எனக் கிழக்கிந்திய புராணங்களில் கூறப்பட்டுள்ளது. (K. M. MUNSHI KRISHNAVATHARA, Bharatiya Vidya Bhavan, 1972. P. 108). —நன்றி! 'தலித் வாய்சு' மார்ச்சு: 89

தமிழரைக் கொண்டே தமிழினத்தை அழிப்பதைத் தடுத்து நிறுத்துங்கள்!

- அதியமான் -

25-3-89 காரிக்கிழமையன்று தமிழகச் சட்டப் பேரவையில் முதல்வர் கலைஞரை, இவ்வாண்டின் வரவு செலவு அறிக்கையைப் படிக்க விடாமல் சில பார்ப்பன அடிமைகளின் ஒத்துழைப்போடு தடுத்துப் போர்க்களமாக மாற்றித் தமிழர்களின் அரத்தத்தைச் சிந்த வைத்திருக்கிறார்கள். தமிழ்மொழி இனக்காவலுக்காகப் பார்ப்பனரோடு வடவரும் தமிழினத்திற்குச் செய்யும் தீச்செயல்களைத் தடுக்கும் ஒரு தடுப்புச் சுவர் கலைஞர் என்ற பாவலரேறு அவர்களின் கூற்றுப்படி, முதல்வர் செயல்படுகிறார். இதனை உணர்ந்த பார்ப்பன அடிமைகள் கலைஞர் மீது பொறாமை கொண்டு நஞ்சோடு கொஞ்சுகிறார்கள். அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் ஒரு தமிழர் தாமே! அவரை கே. கே. எசு. எசு. இராமச்சந்திரன் ஒலி பெருக்கித் தண்டால் மண்டையிலடித்துக் காயப்படுத்திருக்கிறார். தமிழனுடைய அரத்தம் ஒரு தமிழனால் சிந்தப்படுகிறது. தமிழ்க் குடிமக்கள் வெட்கப்படும் செயலிது; இக்கொலைஞனால் தமிழினத்திற்கு. எவ்வகைப் பயனும் நிகழாது. பார்ப்பனரின் எச்சிலைக்குக் காத்துக் கிடப்பவரே அவர். ஒரு தமிழன், கலைஞர், சூத்திரன் முதலமைச்சராக இருத்தல் கூடாது என்பதில் பார்ப்பனர் செய்யும் கொடுஞ் செயலுக்கு கே. கே. எசு. எசு. ஆர். துணையாகி விட்டார். கலைஞர் ஆண்டால் தமிழினத்தின் முன்னேற்றத்திற்கு நல்லவை செய்து விடுவார் என்ற அச்சம் பார்ப்பனர்களுக்கு உண்டு. அதனாலேயே பார்ப்பன ஏடுகள் ஒரே முகமாகக் கலைஞர் வெற்றியில் இருந்து இன்று வரை அந்த வெற்றியை இழிவுபடுத்துகின்றன. இதனை அ. தி. மு. க. தமிழர்களும், கைநூலாடை இந்திரா அடிமைகளும் அறிவார்கள். தமிழர்களுக்கு எவ்வகை நன்மையையும் செய்யாத ம. கோ இராமச்சந்திரனைப் புகழ்ந்தது இதனாலேயே. அந்தச் சூதர் தமிழர்களுக்குப் பகையாக எப்போதும் நயவஞ்சகமாகச் செயலாற்றவே செயலலிதாவை உருவாக்கி விட்டு விட்டார். அந்த அம்மையார்-தாம் இந்தப் போர்க்களத்தைத் தொடங்கி வைத்துள்ளார். அந்த நஞ்சுள்ளம் நான் 'பெண்ணென்று பாராமல் தாக்கப்பட்டிருக்கிறேன்' என்றும் இன்னும் பல பொய்ப்பழியுரைகளையும் மக்களிடத்திலே பரப்பித் தமிழர் ஆட்சியைக் கலைக்க முயன்று வருகிறார்.

முதலமைச்சர் என்றாலும், எதிர்க்கட்சித் தலைவர் என்றாலும் ஆண் பெண் வேறுபாடு கிடையாது. இதை முன்னாள் அவைத் தலைவர் பி. எச். பாண்டியன் மிகத் தெளிவாக அவையில் கூறி இருக்கிறார், அவர் கூற்று:- சட்டமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர் என்பவருக்கெல்லாம் சிறப்புத் தகுதி எதுவும் கிடையாது. எல்லோரும் ஒன்று தான். (சூனியர்போசுட் 31-3-89) அரசியல் அறிவுடையவர்கள் இதனை ஒப்புக் கொள்வர். பெண்னென்றால் எதையும் செய்யலாம் என்ற பொருள்? அல்லது ஆண் என்றாலும் எதையும் செய்யலாம் எனவும் பொருள் கிடையாது. செயலலிதா கூறுவது போல பெண் என்பதற்காக ஒரு மாநில முதலமைச்சர் கையிலிருந்த அறிக்கையைப் பிடித்து இழுக்கலாமா? ஒரு பெண் ஓர் ஆணின் கையைப் பிடித்து இழுத்தது தவறு இல்லையா? ஞாயம் தெரிந்தவர்கள் கூறட்டும். அதோடு மட்டுமன்று. செங்கோடன் என்ற பார்ப்பன அடிமையைப் பார்த்து "டேய் குத்துடா அவனை, (முதல்வரை)" என ஆணையிட்டிருக்கிறார், அந்தப் பார்ப்பனத்தி. மேலும் "முதல்வர் ஒரு கொலைக் குற்றவாளி (Criminal ; வரவு செலவு அறிக்கையைப் படிக்கக் கூடாது" என்று கூறிக் கொண்டே அறிக்கையைப் பிடித்து அந்தப் பெண் இழுத்திருக்கிறார். செங்கோடனை 'அடே' என்று அழைத்து முதல்வரைக் குத்தக் கூறி இருக்கிறார். அந்த அடிமையும் முதல்வரைக் குத்தித் தள்ளி இருக்கிறார். பார்ப்பனர் சூழ்ச்சி இது தான். தமிழர்களைக் கொண்டே தமிழரை வீழ்த்தும் சூது இது. ஒரு தமிழன் அ. தி. மு. க. விலிருந்து எதிர்க்கட்சித் தலைவராக வர முடியவில்லை. வெட்கம்! இந்த நிலை இன்று மட்டுமன்று, பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்திலே பார்ப்பனர் செய்யும் சூழ்ச்சிச் செயல். தமிழர்கள் இதை உணரவில்லையே!

செயலலிதா என்னும் ஒரு பெண் தாக்கப்பட்டது குற்றம்- என்றே வைத்துக் கொண்டாலும் துரௌபதியை மான இழிவு செய்யும் கதை மாபாரதம். அதை எரித்து விட வேண்டியது தானே! அக் கதையை ஏன் ஒளிப்படக் காட்சியிலும் பேசும் படங்களிலும் காட்டுகிறார்கள். பாரதக் கதையும் பெண்ணை இழிவு படுத்துங் கதை தானே! பாரதக் கதையை மக்களிடத்தில் பரப்பக் கூடாது என பார்ப்பனர் கூடி ஒரு போராட்டம் தொடங்க முடியுமா?

தமிழர்களை வீழ்த்தப் பார்ப்பனர் தங்களுடைய பெண்களைப் பயன்படுத்தினார்கள் என்பர். அஃது உண்மையாயிற்று. பார்ப்பனப் பெண் செயலலிதாவை முன்னிலைப் படுத்தி ஒரு மாநில முதலமைச்சரின் கையிலிருந்த அறிக்கையைப் பிடித்து இழுக்க வைத்து, மற்றவர்களுக்குச் சினமூட்டி, ஒரு போர்க்களமாகச் சட்டப் பேரவையை மாற்றி விட்டார்கள். இவ்வகையில் ஓர் எதிர்க்கட்-

Scanned with CamScanner

சித் தலைவர் முதல்வரோடு மல்லாடல் உலகில் எந்த நாட்டிலும் நடந்ததில்லை. தொடங்கிய செயலை மறைத்து விட்டு சூத்திரன் ஆட்சி கூடாது என்பதைச்சூத்திரனைக்கொண்டே வீழ்த்துகிறார்கள், இங்குவந்தேறிகள். மானங்கெட்ட தமிழர்கள் கத்துக்கததென்று கத்துகிறார்கள். இலக்கியம்,வரலாறு படித்த குமரிஅனந்தன் மனச்சான்றில்லாது தகுதியற்ற சொற்களைக் கலைஞர் மீது சுமத்திப் பேசி இருக்கிறார். தமிழனுடைய அரத்தத்தைச் சிந்த வைத்து விட்டு ஏளனம் பேசுகிறார். அவர் தமிழன் தானா?

மக்களுக்கு நன்மைகளைச் செய்ய, நன்கு ஆய்ந்து நாட்டின் ஏழ்மையைப் போக்க, நல்ல தொரு வரவு செலவு அறிக்கையைப் படிக்க விடாமல் தடுக்கவே இதுத் திட்டமிடப் பட்டகளம். இந் நாட்டு மக்களை நன்கு ஏமாற்றி தந்நலத்தைப் பெருக்கிக் கொண்டே இந்திராக்காரர்களும், செயலலிதாக் கட்சியின் நரிக்கும்பலும் சேர்ந்து இந்தக் கேடு கெட்ட செயலில் இறங்கி இருக்கிறார்கள். மக்கள் புரிய வேண்டும் கோடி கோடியாகக் கொள்ளையடித்து வைத்து விட்டுப் போன ம. கோ. இரா.வையே அடையாளம் காணத் தெரியாத மக்கள் எங்கே இதையெல்லாம் புரியப் போகிறார்கள்? செயலலிதா கும்பலில் இருக்கும். திருநாவுக்கரசோ சாத்தூர் இராமச்சந்திரனோ மக்களுக்கு நன்மை செய்யப் பதவியைத் தேடவில்லை; இன்னும் கொள்ளையடிக்கவே! இன்னும் அவர்களிடம் கொள்ளைக் கணக்குகள் வெளியாகிக் கொண்டிருப் பதிலிருந்து நன்கு தெரிகிறது. செயலலிதாவின் நண்பன் நடராசன் கொள்ளையடித்ததாய் அவர்கள் கட்சிக்காரர் தேனி சிரிதர் என்பவரே கூறி வழக்கு மன்றம் சென்றுள்ளார். மக்கள் எப்போதும் ஏமாற மாட்டார்கள் என்பதை இந்த நஞ்சுக் கூட்டங்கள் உணர வேண்டும். ஆளுங்கட்சியாகிய தி. மு. க. மீது வீண்பழிகளைப் போட எண்ணிக் கொண்டிருக்க வேண்டாம். நாட்டின் முன்னேற்றத்தில் கவனங்கொண்டு செயல்பட்டால்தான் நல்லது; அல்லது சூதர்களின் அரசியல் வாழ்வு அழியும்.

இப்போது சட்டப் பேரவை நிகழ்ச்சிகளை எடுத்து நடவடிக்கை எடுக்கப் போவதாய் பார்ப்பனர் நடுவண் ஆட்சி அறிவித்துள்ளது. முன்னால் அ. தி. மு. கவை இதே முறையில் களங்கப் படுத்திய இந்திரா கட்சியின் மீது நடுவண் அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அப்போதுதான் யசோதா என்ற பெண் உறுப்பினர் தாக்கப்பட்டிருந்தார். இப்போது நடந்த கலவரங்களுக்குக் கூடுதலாகவே இந்திராக் கட்சிக்காரர்கள் பேரவைக்குள் விளையாடினார்கள். அவர்களே ஓர் அவைத் தலைவரை அமரச் செய்து சிறு பிள்ளைத்தனமாகக் கூத்தாட்டம் போட்டார்கள். அதை மக்கள் மறக்கவில்லை. அதன்படிதானே நடந்துள்ளது என ஞாயம் பேச வரவில்லை. ஏன் அதன்மீது நடவடிக்கை இல்லை என்பதே கேள்வி.

அருமைத் தமிழர்களே இலங்கையில் தமிழன் கருவறுக்கப் படுகிறான். இந்தி நாட்டில் வாழும் இங்குத் தமிழனை ஆளவிடாமல் பார்ப்பனர்கள் செய்யும் கொடுமையான சூழ்ச்சிகளை முறியடிக்க அனைவரும் ஒன்றாய் இணையுங்கள். வேற்றுமை உணர்வுகளை விரட்டியடியுங்கள். எக்கட்சியில் இருந்தாலும் நாம் தமிழர்கள் தாம் என உணர்ந்து நடமாடுங்கள். பாவலரேறு அவர்கள் அடிக்கடி இதனை வற்புறுத்துவதை எண்ணிப் பாருங்கள்.

தமிழர் ஆண்டால்தான் தமிழர்கள் முன்னேற முடியும். **'எந்தக் கட்சியில் நீ இருந்தாலும் இனத்தை மறவாதே'** என்ற பாவலரேறு அவர்களின் வைரமொழிகளை எண்ணி மனத்தில் எப்போதும் இருத்திக் கொண்டு அனைவரும் ஒன்று படுங்கள். பார்ப்பனர்களைத் தமிழகத்தில் அதிகாரஞ் செய்ய விடாதபடி தடுத்து நிறுத்துங்கள். பார்ப்பனரின் சூழ்ச்சிகளைப் பரவவிடாதபடி தடுக்கும் தடுப்புச்சுவர் கலைஞர். அவரை வீழ்த்த எண்ணும் பார்ப்பனரையும் பார்ப்பனர் அடிமைகளையும் விரட்டியடியுங்கள். கலைஞரை வீழ்த்தினால் தமிழர்கள் அழிவது உறுதி. கண் முன்னாலே இலங்கைத் தமிழர்கள் அழிவதைப் பாருங்கள். தமிழீழ விடுதலையும் தமிழக விடுதலையும் தமிழர்களுக்குத் தேவையானது- போராட முன் வர வேண்டும்!

எண்ணிடுக! எழுச்சி கொள்க!

பறம்பை அறிவன்.

வானொலி கேட்டோம்
தொலைக்காட்சி கண்டோம் —
படைத்தோம் என்றோம் - - -
வாழ்வுரிமைப் போராட்டம்
நடத்துகின்ற ஈழத்தானை
எண்ணிப் பார்த்தேனும்
எழுச்சியிங்கு பெற்றோமா?
மாந்தர்க் குற்ற துயரங்கள்
கோளாறு கண்டபின்னும்,
பழுதுற்ற வானொலிக்குத்
தொலைக்காட்சிக்கு வருந்தும்
வருத்தத்தில் ஒரு சிறிதும்
தமிழர்க்காய்க் கொண்டோமோ?
விலங்குகளும் எதிர்த்துப் போராடும்;
வாழும் வகை தேடும்! — தமிழர்களே!
பழம்பெருமை பலபடைத்த தமிழர்களே!
உலகத்துள்ள நம்மின
உரிமைக்கு ஒருகுரலை
முணுமுணுப்பைக் காட்டினோமா?
அதற்கென எள்முனையும் முயன்றோமா?
எண்ணிடுக — எழுச்சி கொள்க!

Scanned with CamScanner

ஆள்க! வாழ்க!

பாவலர் சின்னப்பனுர்

தமிழர்களின் இனஉணர்வு சாகவில்லை
என்பதனைத்
தமிழ் மக்கள் தேர்தலிலே காட்டி விட்டார்!
தமிழினத்தை இந்தியம்செய் பேராயக் கட்சிக்கே
சவக்குழியும் தமிழகத்தில் தோண்டி விட்டார்!
தமிழ்நாட்டுக் கட்சிகளில் தமிழ்க்கலைஞர்
கட்சியினைத்
தமிழருக்குக் காப்பென்றே எண்ணி மக்கள்
தமிழினத்தின் தலைவா! நீ ஆண்டிடுக! அடிமை
நிலை
தவிர்த்திடுக! எனத்தீர்ப்புத் தந்திட் டாரே!

எம்கலைஞ ரேயினிமேல் மக்கள்தம் எண்ணத்தை
ஏற்றேதான் தவருமல் மறந்தி டாமல்
நம்மொழியின் நம்மினத்தின் நம் நாட்டின்
நீளடிமை
நீக்கியிங்கே தொல்சிறப்பை மீண்டும் நாட்ட
உம்நலத்தை மறந்திட்டே இனநலத்திற்
குழைப்பதுவே
உம்கடமை என்றுளத்தில் கொள்ளல்
வேண்டும்!
வம்பரந்த வடவர்களின் திமிரடக்கிச் செருக்
கொடுக்கி
வடக்கோடு நிற்கவகை செய்தல் வேண்டும்!

மாநிலத்தில் தன்னுட்சி வடக்கரொடு கூட்டாட்சி
வண்டமிழர் அடிமைநிலை மாற்ற ஆட்சி
ஏன் வேண்டும் நமக்கிங்கே? அடிமைகளாய்
வடவரிடம்
என்றென்றும் நிலையாக இருப்ப தற்கா?
தான், தனது நலமேதான் பெரிதென்போர்க்
கதுவேண்டும்
தமிழினத்தைக் காப்போர்க்குப் பகையாம்
அஃதே!
ஆனதனுல் அதை விடுத்தே விடுதலைக்கே வழி
வகுத்தே
அமுதத்தமிழ்த் தாய்நாட்டை ஆள்க! வாழ்க!

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓரிரு திங்களாக முடிவெட்டாமல் இருந்ததைப் பார்த்துக் கண்காணிப்பாளர், 'ஏன் தாடியெல்லாம் வளர்க்கிறீர்கள்' என்றும், அதன் அடுத்த நாள், முடிவெட்டப் போகையில், சிறையதிகாரி (Jailor) ஐயா வந்து, 'தம்பி' பொழிலுக்கு மொட்டை அடிச்சிடு' என்று சிரிப்பாகப் பேச, பின் முடிவெட்டி முடித்து விட்ட பின், 'பார், இப்பொழுது தான் மாப்பிள்ளை மாதிரி இருக்கிறது' என்று, சொல்லும் வகையில் மிக மிக அன்பாக நடந்து கொண்டிருக்கின்றனர். மேலும் உணவுகளில் கூட நிறைய மாற்றம் (நாங்கள் கேட்டுக் கொண்டதன் பேரில்) உள்ளது. ...எனவே எவ்வகைத் தொல்லையும் ஓர் இம்மியும் இல்லை. மாலையில் விளையாடுகிறோம்; பகலில் படிக்கிறோம். இப்படிப் பொழுதுதான் மிக ஆக்கமான நிலையில் செல்லாமல் உள்ளதே— என்பது தவிர பிற எதுவும் சிறு கவலையும் இல்லை. எனவே எது பற்றியும் சிறிதும் கவலைப்பட வேண்டாம்...

அன்பு மகன்
பொழில்

(2-12-88)

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு - 36

ஆட்சியாளர் வேறு; அதிகாரிகள் வேறு; அதிகாரிகளுக்குக் கொள்கை இல்லை. ஆட்சியாளர்க்குக் கொள்கை உண்டு.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 119.

அனுப்புதல்:
தமிழ்நிலம்
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு. 1-00
ஆண்டுக் கட்டணம்	உரு. 50-00
அரையாண்டுக் கட்டணம்	உரு. 25-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657